RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்


DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-58 | 04 மார்ச் | செவ்வாய்க்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## மாநில அந்தஸ்து கோரிக்கையை நிறைவேற்ற அரசு உறுதிபூண்டுள்ளது! ஜம்மு காஷ்மீர் துணைநிலை ஆளுநர்




ஜம்மு, மார்ச்.4

ஜம்மு காஷ்மீர் மக்களின் மாநில அந்தஸ்து கோரிக்கையை நிறைவேற்றுவதில் தனது அரசு உறுதியாக இருப்பதாக துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீரில் 7 ஆண்டுகளுக்குப் பிறகு இன்று கூடிய பட்ஜெட் கூட்டத் தொடரில் துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா உரையாற்றினார். அப்போது அவர், “இந்தக் கூட்டத்தொடர் வெறும் சட்ட மன்ற சம்பிரதாயம் மட்டுமல்ல, நல்லாட்சி, வெளிப்படைத் தன்மை மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான உறுதிப்பாட்டின் பிரதிபலிப்பாகும்.

ஜம்மு காஷ்மீர் மக்களின் முதன்மையான விருப்பங்களில் ஒன்று முழு மாநில அந்தஸ்தை மீட்டெடுப்பதாகும். இந்த விருப்பத்தை நிறைவேற்றுவதில் எனது அரசாங்கம் உறுதியாக உள்ளது. உணர்வுப்பூர்வமாகவும், அரசியல் ரீதியாகவும் இந்த விருப்பத்தின் முக்கியத்துவத்தை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. இதற்கான செயல்முறையை எளிதாக்க தொடர்புடைய அனைவருடனும் அரசு தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

ஜம்மு காஷ்மீரில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தால் ஏழு ஆண்டுகளில் முதன் முறையாக சமர்ப்பிக்கப்படும் இந்த பட்ஜெட் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் தயாரிக்கப்பட்ட மக்களின் சக்தியைக் குறிக்கிறது.” என்று தெரிவித்தார்.

## ட்ரம்ப்புக்கு நன்றி தெரிவித்து வீடியோ வெளியிட்ட ஜெலன்ஸ்கி



கீவ்., மார்ச்.4

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்புக்கு நன்றி தெரிவித்து வீடியோ வெளியிட்டுள்ள உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, “இது உக்ரைனின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான நன்றியுணர்வு” என குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா தொடுத்த போரில், உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா இருந்து வருகிறது. அமெரிக்கா 350 பில்லியன் டாலர் மதிப்பிலான உதவிகளை உக்ரைனுக்குக் கொடுத்துள்ளதாக அந்நாடு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், சில தினங்களுக்கு முன்பு வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் உள்ளிட்டோரை ஜெலன்ஸ்கி சந்தித்தது சர்ச்சையானது. அப்போது, ஜெலன்ஸ்கி, அமெரிக்க அதிபருக்கு நன்றி தெரிவிக்காததை சுட்டிக் காட்டினார். அப்போது, வான்ஸ் குரலை உயர்த்திப் பேசுவதாக ஜெலன்ஸ்கி குற்றம் சாட்டினார். இந்த சந்திப்பின்போது, இருதரப்புக்கும் இடையே மேற்கொள்ளப்பட இருந்த கனிம வளம் தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தாகவில்லை. அதோடு, பேச்சுவார்த்தை பாதியில் முடிவுக்கு வந்து ஜெலன்ஸ்கியும் அவரது குழுவினரும் அங்கிருந்து வெளியேறினர்.

இதன் தொடர்ச்சியாக, உக்ரைனுக்கு ஆதரவு அளித்து வரும் ஐரோப்பிய நாடுகளின் உச்சிமாநாடு நேற்று (மார்ச் 02) லண்டனில் நடைபெற்றது. இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் நடத்திய இந்த பாதுகாப்பு உச்சிமாநாட்டில் பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, இத்தாலி பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி உள்ளிட்ட 18 தலைவர்கள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில், ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு தங்களது ஆதரவை உறுதிப்படுத்தின. மேலும், இங்கிலாந்து, உக்ரைனுக்கு கடன் வழங்குவதற்கான ஒப்பந்தமும் கையெழுத்தாகியது.

இந்த மாநாட்டை அடுத்து ஜெலன்ஸ்கி, அமெரிக்க அதிபருக்கு நன்றி தெரிவித்து ஒரு வீடியோ வெளியிட்டுள்ளார். தனது எக்ஸ் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள அந்த வீடியோவில், “தற்போது கிடைத்துள்ள பலன் என்னவென்றால், ஐரோப்பாவிடமிருந்து தெளிவான ஆதரவை நாங்கள் பெற்றுள்ளோம். இன்னும் அதிக ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்புக்கான இன்னும் அதிக விருப்பத்தை நாங்கள் கொண்டிருக்கிறோம்.

அமைதி உண்மையானதாக இருக்க, உக்ரைனுக்கு உண்மையான பாதுகாப்பு உத்தரவாதங்கள் தேவை எனும் முக்கிய பிரச்சினையில் அனைவரும் ஒன்றுபட்டுள்ளனர். இங்கிலாந்து உள்பட ஒட்டுமொத்த ஐரோப்பிய கண்டத்தின் நிலைப்பாடு இதுதான்.

அமெரிக்காவின் முக்கியத்துவத்தை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். அமெரிக்காவிடமிருந்து எங்களுக்குக் கிடைத்த அனைத்து ஆதரவிற்கும் நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.நன்றியை உணராத நாள் இல்லை. இது நமது சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான நன்றியுணர்வு.

உக்ரைனில் நமது எதிர் தாக்குதல் என்பது எங்கள் கூட்டாளிகள் எங்களுக்காகவும் அவர்களின் சொந்த பாதுகாப்பிற்காகவும் என்ன செய்கிறார்கள் என்பதைப் பொறுத்தது.

எங்களுக்குத் தேவை அமைதி, முடிவில்லாத போர் அல்ல. அதனால்தான் பாதுகாப்பு உத்தரவாதங்கள் இதற்கு முக்கியம் என்று நாங்கள் கூறுகிறோம்.” என தெரிவித்துள்ளார்.

## “நீட் ரகசியத்தை ஸ்டாலினும், உதயநிதியும் உடனடியாக சொல்ல வேண்டும்” எடப்பாடி பழனிசாமி



சென்னை, மார்ச்.4

“நீட் ரகசியத்தை மு.க.ஸ்டாலினும் உதயநிதியும் உடனடியாக சொல்ல வேண்டும், அப்படி இல்லை என்றால் திமுக பொய்தான் சொன்னது என்ற உண்மையை ஒப்புகொண்டு இனியாவது எந்த நீட் மரணமும் நிகழாவண்ணம் தடுக்க வேண்டும்.” என எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் நீட் தேர்வு குறித்த அச்சம் காரணமாக மாணவி ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்ற செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சி அடைந்தேன். அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் வருத்தங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்று தேனியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கூட திமுகவின் நீட் ரகசிய அரசியல் நாடகம் குறித்து நான் பேசிய நிலையில், நாமும் மருத்துவர் ஆகிவிடலாம் என்கிற உயரிய லட்சியத்தோடு அல்லும் பகலும் படித்து வரும் மாணவர்கள் மத்தியில், ஆட்சிப்பொறுப்பேற்று 4 ஆண்டுகள் ஆகியும் இன்று வரை அவர்களுக்கு திமுக, அந்த நீட் ரகசியத்தை சொல்லாமல், ரகசியம் இருப்பதாக பொய்யான நம்பிக்கையை ஏற்படுத்தி அவர்களை குழப்பத்திலேயே வைத்திருக்கும் இந்த ஸ்டாலின் மாடல் அரசுதான் மாணவியின் மரணத்திற்கு முழுப்பொறுப்பேற்க வேண்டும்.

அந்த நீட் ரகசியத்தை தந்தையும் மகனும் உடனடியாக சொல்ல வேண்டும். அப்படி இல்லை என்றால், திமுக பொய்தான் சொன்னது என்ற உண்மையை ஒப்புகொண்டு, இனியாவது எந்த நீட் மரணமும் நிகழாவண்ணம் தடுக்க வேண்டும்.” என தெரிவித்துள்ளார்.

## நாகை: பொதுத்தேர்வு எழுதவந்த மாணவர்களுக்கு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் நேரில் வாழ்த்து



நாகை, மார்ச்.4

நாகையில் பிளஸ் 2 பொதுத் தேர்வு எழுதவந்த மாணவர்களுக்கு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேரில் வாழ்த்து தெரிவித்தார்.

தமிழக முதல்வர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நாகை வந்திருந்த தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி இன்று காலை மாணவர்களை சந்தித்து வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

நாகப்பட்டினத்தில் அமைந்துள்ள நடராஜன் தமயந்தி மேல்நிலைப் பள்ளியில் தேர்வு எழுதவுள்ள மாணவர்களைச் சந்தித்து ஊக்கமளித்தார். பயம் இன்றி தேர்வு எழுதுமாறு மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார். அப்பள்ளி தேர்வு மையமாக செயல்படுவதால் அருகாமையிலுள்ள பள்ளி மாணவர்கள் சிறப்பு பேருந்தில் அழைத்து வரப்பட்டார்கள். அவர்களையும் சந்தித்து வாழ்த்துகள் தெரிவித்தார். “மாணவச் செல்வங்களே மகிழ்ச்சியுடனும் நம்பிக்கையுடனும் தேர்வு எழுதுங்கள்.” என்று அப்போது அவர் அறிவுரை கூறினார்.

நாகை மாவட்டத்தில் பிளஸ் 2 பொதுத் தேர்வை 33 தேர்வு மையங்களில் 71 பள்ளிகளைச் சேர்ந்த ஆண்கள் 3002, பெண்கள் 3687 என மொத்தம் 6689 மாணவர்கள் எழுதுகின்றர். பள்ஸ் 1 பொதுத் தேர்வை 33 மையங்களில் 72 பள்ளிகளைச் சேர்ந்த ஆண்கள் 3257 பேர், பெண்கள் 4117 பேர் என மொத்தம் 7374 மாணவர்கள் எழுதுகின்றனர்.

தேர்வுப் பணியில் 671 ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். பறக்கும்படை உறுப்பினர்கள் 75 பேர் நியமிக்கப்பட்டு தேர்வு மையங்கள் கண்காணிக்கப் படுகின்றன. தனித்தேர்வர்கள் 97 பேர் தேர்வு எழுதுகின்றனர். மாற்றுத்திறனாளி மாணவர்கள் 121 பேர் தேர்வு எழுதுகின்றனர். அவர்கள் சொல்வதை எழுதுபவர், கூடுதல் நேரம் உட்பட அவர்களுக்கு தேவையான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

## இந்தியை தாய்மொழியாக கொண்டவர்கள் மும்மொழி கொள்கையை ஏற்கவில்லை: திருமாவளவன் கருத்து



சென்னை, மார்ச்.4

இந்தியை தாய்மொழியாகக் கொண்டவர்கள் மும்மொழிக் கொள்கையை ஏற்கவில்லை என விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசுப் பணிகளில் எஸ்சி, எஸ்டி சமூகத்தினருக்கு பதவி உயர்வில் இடஒதுக்கீடு வழங்க கோரி விசிகவின் அரசு ஊழியர் ஐக்கியப் பேரவை சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் பங்கேற்ற பிறகு செய்தியாளர்களிடம் திருமாவளவன் கூறியதாவது: வரும் 5ம் தேதி நடைபெறவுள்ள அனைத்து கட்சிக் கூட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. மக்கள் தொகை அடிப்படையில் மட்டுமே மறுவரையறை செய்யப்பட்டால் தமிழகம் உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்கள் பாதிக்கப்படும். இதற்காக கூட்டப்பட்ட அனைத்து கட்சிக் கூட்டத்தை புறக்கணிக்கும் கட்சிகள் முன்வைக்கும் வாதங்கள் ஏற்புடையதாக இல்லை.

மும்மொழிக் கொள்கையை தமிழக மக்கள் வரவேற்பது போன்ற தோற்றம் உருவாக்கப்படுகிறது. இந்தியை படிக்க வேண்டுமென பாஜக ஆதரவு கரம் நீட்டுவது அவர்களது அரசியல் ஆதாயம். இது மக்களின் நலன்களுக்கானது அல்ல. இந்தியை தாய்மொழியாகக் கொண்டவர்கள் மும்மொழிக் கொள்கையை ஏற்கவில்லை.

அவர்கள் தமிழை படிக்க வேண்டும் என்ற கட்டாயமல்ல. இருமொழிக் கொள்கையே நாடு முழுவதற்கும் போதுமானது. இந்தியை கட்டாயமாக்குவது ஒரே நாடு ஒரே மொழி என்னும் நிலையை உருவாக்குவதற்கான சதி. எனவே, இந்த சதித்திட்டத்தை முறியடிக்க வேண்டும்.

கச்சத்தீவை மீட்டுக் கொடுக்க வேண்டியது மத்திய அரசு தான். ஆனால், அதற்கு தமிழக அரசு தான் பொறுப்பு என்பதுபோல ஆளுநர் நாடகமாடுகிறார், அரசியல் செய்கிறார். திமுக கூட்டணி உடையும் என்ற முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாரின் எதிர்பார்ப்பு நிறைவேறாது. தேர்தல் நேரத்தில் தொகுதி குறித்த பேச்சுவார்த்தை இருக்கும். மற்ற நேரத்தில் மக்கள் பிரச்சினையை தான் பேசுவோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## மத்திய பல்கலை. சேர்க்கைக்கான க்யூட் நுழைவுத் தேர்வு மே 8ல் தொடக்கம்



சென்னை, மார்ச்.4

மத்திய பல்கலைக்கழகங்களில் இளநிலை படிப்புகளில் சேருவதற்கான க்யூட் தேர்வு கணினி வழியில் மே 8ல் தொடங்கி ஜூன் 1ம் தேதி வரை நடைபெற உள்ளதாக என்டிஏ அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் உள்ள மத்திய பல்கலைக்கழகங்கள் மற்றும் அதன்கீழ் இயங்கும் கல்லூரிகளில் இளநிலை, முதுநிலை பட்டப்படிப்புகளில் சேர பல்கலைக்கழக பொது நுழைவுத் தேர்வில் (க்யூட்) தேர்ச்சி பெறவேண்டும். இந்த தேர்வை தேசிய தேர்வுகள் முகமை (என்டிஏ) ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. அதன்படி, அடுத்த கல்வியாண்டில் (2025 26) இளநிலை படிப்புகளுக்கான க்யூட் நுழைவுத் தேர்வு வரும் மே 8 முதல் ஜூன் 1ம் தேதி வரை நடத்தப்பட உள்ளது. இதற்கான இணையதள விண்ணப்ப பதிவு தற்போது தொடங்கப்பட்டுள்ளது.

இதையடுத்து விருப்பமுள்ளவர்கள் https://cuet.nta.nic.in/ என்ற இணையதளம் வழியாக மார்ச் 22ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்ப கட்டணம் செலுத்த மார்ச் 23ம் தேதி கடைசி நாளாகும். தொடர்ந்து விண்ணப்பங்களில் மார்ச் 24, 25, 26ம் தேதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளலாம். இதில் ஏதேனும் சிரமங்கள் இருப்பின் 01140759000 என்ற தொலைபேசி எண் அல்லது cuet-ug@nta.ac.in என்ற மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளலாம். க்யூட் தேர்வு தமிழ், ஆங்கிலம், இந்தி உட்பட 13 மொழிகளில் நடத்தப்பட உள்ளது.நடப்பாண்டு க்யூட் நுழைவுத் தேர்வு விதிமுறைகளில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி, மாணவர்கள் 12ம் வகுப்பில் எந்த பாடம் படித்திருந்தாலும், விரும்பிய பாடத்தில் தேர்வு எழுதலாம். அதேபோல், ஒருவர் அதிகபட்சம் 5 பாடங்கள் வரை விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்படுகிறது. மேலும், ஹால் டிக்கெட் வெளியீடு உட்பட கூடுதல் விவரங்களை /www.nta.ac.in/ என்ற தளத்தில் அறியலாம் என்று என்டிஏ தெரிவித்துள்ளது.

## சீமான் வழக்கு தொடர்பான விசாரணைக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவு



சென்னை, மார்ச்.4

நடிகை ஒருவர் சீமான் தன்னை திருமணம் செய்து கொள்வதாகக் கூறி ஏமாற்றி தன்னுடன் உறவு வைத்துக் கொண்டதாக வளசரவாக்கம் காவல் நிலையத்தில் கடந்த 2011 ஆம் ஆண்டு புகார் அளித்தார்

புகாரின்பேரில், சீமான் மீது போலீசார் வழக்குப் பதிவு விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில், இந்த வழக்கை ரத்து செய்ய வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் சீமான் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுமீதான விசாரணை கடந்த 17 ஆம் தேதி நடைபெற்றது. அப்போது, நீதிபதி கற்பழிப்பு வழக்கை ரத்து செய்ய முடியாது. இந்த வழக்கை 12 வாரத்துக்குள் போலீசார் விசாரித்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டனர். இதனிடையே, உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்கு எதிராக சீமான் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில்,

இந்த விவகாரத்தில் முன்வைக்கப்பட்ட வாதங்களையும், அனைத்து அம்சங்களையும் முறையாக கருத்தில் கொள்ளவில்லை. தன் மீதான வழக்கை ரத்து செய்ய மறுத்த உயர்நீதிமன்றம் உத்தரவை ரத்து செய்ய வேண்டும்.

மேல்முறையீட்டு மனுவை விசாரித்து தீர்ப்பு கூறும் வரை, 12 வாரங்களுக்குள் புலன் விசாரணை நடத்தி காவல் துறையினர் அறிக்கை தாக்கல் செய்ய உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீமான் தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டு மனு சுப்ரீம் கோர்ட்டில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது சீமான் தரப்பின் ஆஜரான வழக்கறிஞர் வாதிடுகையில், “நடிகை வழக்கை 3 முறை திரும்ப பெற்றுள்ளார். புதிய அரசு பொறுப்பேற்றவுடன் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக மீண்டும் வழக்கு தொடரப்பட்டுள்ளது என்றார்.

இந்த வழக்கில் எதிர்மனுதாரர் பதிலளிக்க வேண்டும் என்று கூறிய நீதிபதிகள், வழக்கு தொடர்பான விசாரணைக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டனர். இதன் மூலம், சென்னை ஐகோர்ட்டு உத்தரவின் அடிப்படையில் சீமான் மீது வளசரவாக்கம் போலீசார் நடத்திய விசாரணைக்கு இடைக்கால தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் திமுக மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் இன்னபிற மகளிர் அமைப்புகள் சார்பில் சீமானுக்கு எதிராக போராட்டங்கள் அறிவித்துள்ளன. பெண்கள் குறித்து ஆபாசமாக பேசிவரும் சீமானின் கட்சியில் இருக்கும் பெண்கள் தங்கள் இருப்பை மறுபரிசீலனை செய்திட வேண்டும் என்றும் அவர்கள்



தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி சார்பாக தாம்பரம் மேற்கு பஸ் நிலையம் அருகில் உள்ள டாக்டர் அம்பேத்கார் சிலைக்கு அருகில் 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா எம்,எல்,ஏ அவர்களின் ஏற்பாட்டில் 3000 நபர்களுக்கு அறுவை உணவு வழங்கப்பட்டது உடன் தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள், மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்..






சிவகங்கையில் நடைபெற்று வரும் நான்காவது புத்தகத்திருவில் வாழ்வின் மகிழ்ச்சிக்கு பெரிதும் துனை நிற்பது உறவா?நட்பா? எனும் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. ஊராட்சிகளின் உதவி இயக்குனர் கேசவதாசன் வரவேற்புரை ஆற்றினார்.டி.என் அன்புத்துரை நடுவராக இருந்தார். உறவே எனும் தலைப்பில் பேராசிரியர் ஹேமமாலினி அறிவழகன் மீனாட்சிசுந்தரம். ஆகியோரும். நட்பே எனும் தலைப்பில ராமச்சந்திரன். ஜெயஸ்ரீமீனாட்சி லெனின் குமார் ஆகியோர் பேசினார்கள். நிறைவில் வாழ்வின் மகிழ்ச்சிக்கு பெரிதும் துணை நிற்பது உறவே எனநடுவர் தீர்ப்பு வழங்கினார். வட்டார வளர்ச்சி அலுவலர் மாலதி நன்றி கூறினார்.

# பழனி மனநலம் காப்பகத்தில் முதலமைச்சர் பிறந்தநாளில் அறுசுவை உணவு வழங்கல்



பழனி மார்ச்.4

திண்டுக்கல் மாவட்டம் பழனி புதிய தாராபுரம் ரோட்டில் அமைந்துள்ள அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோவிலுக்கு பாத்தியப்பட்ட மனநலக் காப்பகத்தில் 50க்கும் மேற்பட்டோர் அங்கு வசித்து வருகின்றனர் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு காப்பகத்தில் உள்ளவர்களுக்கு அறுசுவை உணவான மூன்று வகையான காய்கறிகள் வடை பாயாசம் அப்பளம் வழங்கப்பட்டது

அப்பொழுது காப்பகத்தில் உள்ளவர்கள் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் நல்ல ஆரோக்கியத்துடனும் நூறாண்டு காலம் வாழ வேண்டும் என வாழ்த்திய சம்பவம் அங்கு உள்ள நிர்வாகிகளை கண்கலங்க வைத்தது

இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர் சாமிநாதன் பேரூர் கழகச் செயலாளர் சின்னத்துரை பேரூராட்சி தலைவர் மேனகா ஆனந்தன் துணைத் தலைவர் சுகாமணி கார்த்திகேயன் பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் கார்த்திகேயன் மற்றும் திமுக கவுன்சிலர்கள் கட்சி நிர்வாகிகள் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்..



நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நிஷா தலைமையில், நகராட்சி ஆணையாளர் ஸ்டான்லி பாபு, ADSP சௌந்தரராஜன், ADSP மணிகண்டன், எஸ்பி ஆய்வாளர் சுஜாதா மற்றும் காவலர்கள் குழு இவர்களுடன் நகராட்சி தூய்மை பணியாளர்கள் இணைந்து புகழ்பெற்ற உதகை அரசு தாவரவியல் பூங்கா நுழைவு வாயிலிருந்து, சேரிங்கராஸ் காந்தி சிலை வரை மாஸ் கிளீனிங் பணியில் ஈடுபட்டனர் நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவலர்கள் குழுவின் இந்த சமூக பணிக்கு, பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்து வருகின்றனர்..

## புதிய பாரதம் அமைப்புசாரா கட்டுமான தொழிலாளர்கள் நல மாநில சங்கம் சார்பில் ஓய்வூதியதாரர்கள் சங்க துவக்க விழா நலதிட்ட விழா




வேலூர் மார்ச்.4

புதிய பாரதம் அமைப்புசாரா மற்றும் கட்டுமான தொழிலாளர்கள் நல மாநில சங்கம் சார்பில் ஓய்வூதியதாரர்கள் சங்க துவக்க விழா மற்றும் நலதிட்ட விழா நடைபெற்றது.

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, தாராபடவேடு, காட்பாடி சித்தூர் பேருந்து நிலையம், ஸ்ரீ நாராயணா திருமண மண்டபத்தில், புதிய பாரதம் அமைப்பு சாரா மற்றும் கட்டுமான தொழிலாளர்கள் நல மாநில சங்கம் சார்பில் ஓய்வூதியதாரர்கள் சங்க துவக்க விழா, ஓய்வூதிய அரசாணைகள் மற்றும் இலவச வேட்டி சேலை வழங்கும் நல திட்ட விழா உழைப்பாளிகளின் பாதுகாவலன் நிறுவனரும் மாநிலத் தலைவருமான டி.வேல்முருகன் தலைமையிலும், மாநில துணைச் செயலாளர் சி சிவானந்தம் முன்னிலையிலும், மாநில பொருளாளர் பி. சீதா வரவேற்புரையாற்றுகையில் குத்துவிளக்கேற்றி தமிழ்த்தாய் வாழ்த்து பாடலுடன் விழா தொடங்கியது. மாநில செயலாளர் கயல்விழி, மாநிலத் துணைத் தலைவர் முருகன், மாநிலத் துணைத் தலைவர் கிருஷ்ணவேணி, மாநிலத் துணைச் செயலாளர் திலகம் வாழ்த்துரை வழங்கி விழாவை சிறப்பித்தனர். இதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர்களை பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக அகில இந்திய கட்டுமான தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பு தலைவரும், தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா தொழிலாளர் நல வாரிய உறுப்பினருமான தொழிலதிபர் ஆர்.டி.பழனி மற்றும் பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# முடிச்சூர் ஊராட்சி 6 கிளைகளின் சார்பில் முதல்வர் முக.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு மரக்கன்று நடல்

முடிச்சூர் மார்ச்.4



முடிச்சூர் ஊராட்சி சார்பில் முதல்வர் முக.ஸ்டாலினின் பிறந்தநாளை முன்னிட்டு முடிச்சூரில் உள்ள 6 கிளைகளிலும் ஒன்றிய துணை செயலாளர் விநாயகமூர்த்தி தலைமை பிறந்தநாள் விழா வெகுசிறப்பாக நடைப்பெற்றது.

செங்கல்பட்டு மாவட்டம் புனித தோமையர் மலை ஒன்றிய முடிச்சூர் அண்ணாநகர் கிளையில் ஒன்றிய துணை செயலாளரும், ஊராட்சி மன்றதுணை தலைவருமான விநாயகமூர்த்தி ஏற்பாட்டில் முதல்வர் பிறந்தநாள் விழாவில் புனிததோமையர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி கழக கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். அதனை தொடர்ந்து 500 நபர்களுக்கு மரக்கன்றுகள் நடப்பட்டது.

முடிச்சூர் கிழக்கு கிளை சார்பில் நடந்த நிகழ்ச்சி கிளை துணை செயலாளர் வெங்கட் ஏற்பாட்டில் கழக கொடியேற்றி 300 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. முடிச்சூர் இந்திராநகர் கிளை சார்பில் கிளை செயலாளர் ரமேஷ் ஏற்பாட்டில் பொதுமக்களுக்கு மரக்கன்று இனிப்புகள் வழங்கப்பட்டது. முடிச்சூர் மேற்கு கிளை சார்பில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சுனில் மேத்யூ ஏற்பாட்டில் 3 இடங்களில் கழக கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு ஒவ்வொரு கிளையிலும் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியும் வெகு சிறப்பாக நடைபெற்றது. முடிச்சூர் கொம்மியம்மன் நகர் கிளை சார்பில் கிளை செயலாளர் சுகுமார் ஏற்பாட்டில் கழக கொடியேற்றி 200 நபர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கினர். முடிச்சூர் லட்சுமி கிளை

சார்பில் கிளை செயலாளர் குமார் ஏற்பாட்டில் கழக கொடியெற்றி 500 நபர் களுக்கு பிரியாணி வழங்கப் பட்டது. முடிச்சூர் பகுதியில் 6 கிளை களிலும் பல்வேறு இடங்களில் திடாவிட மாடல் முதல்வர் முக.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் கிளை செயலாளர் கந்தசாமி, ஒன்றிய பிரதிநிதி ஏ.முருகன், ஆர்.மணிவண்ணன், கிளை செயலாளர்கள் தினகரன் குமுதினி, புஸ்பாவாகினி, மாயஜோதி, சாலமன், வெங்கடஜாலு, இளஞ்செழியன், மாஸ்டர் விஜய், ரவி, கருணாகரன், தில்லை, சிவலிங்கம், பிரவின், ஜெபா, உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# பெரியகுளம் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் கொண்டாட்டம்

பெரியகுளம் மார்ச்.4



தேனி மாவட்டம், பெரியகுளம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் செயல்பட்டு வரும் இ.சி.ஆர்.சி எனப்படும் மனநல காப்பகத்தில் சிகிச்சை பெற்று வரும் 100 க்கும் மேற்பட்டோருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் 72 வது பிறந்த நாளினை முன்னிட்டு தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளரும், தேனி தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான தங்க தமிழ்ச்செல்வன், பெரியகுளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ். சரவணகுமார் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி பெரியகுளம் நகர் கழக செயலாளர் முகமது இலியாஸ் தலைமையில் அசைவ உணவு வழங்கி கொண்டாடினர்.இந்த நிகழ்வில், பெரியகுளம் நகர அவைத்தலைவர் வெங்கடாசலம், நகர துணைச் செயலாளர்கள் சேதுராமன், வாசுகி, சரவணன், மாவட்ட பிரதிநிதி செந்தில்குமார், ராஜபாண்டி, நகர பொருளாளர் சுந்தரபாண்டி, தேனி வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கார்த்திக், மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர் ஜியாவுதீன், நகர் மன்ற உறுப்பினர்கள் ரூபினி ஜான், பிரியங்கா ராஜ்குமார், முகமது அசினா, சுதா நாகலிங்கம், பாண்டியராஜன், வைகை சரவணராஜா, வழக்கறிஞர் சக்தி மற்றும் மாவட்ட, நகர நிர்வாகிகள் என ஏராளமானோர் உடன் இருந்தனர் .

# பழனி அடிவாரம் நகராட்சி நடுநிலை பள்ளி ஆண்டு விழா

பழனி மார்ச்.4




திண்டுக்கல் மாவட்டம் பழனி அடிவார பகுதியில் உள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளியில் நடந்த 99 ஆவது ஆண்டு விழாவில் பள்ளி தலைமை ஆசிரியர் ராதா தலைமை வகித்தார் பள்ளியில் சிறப்பு அழைப்பாளர்களாக கல்வி அலுவலர் மற்றும் விமல பாண்டியன் வார்டு கவுன்சிலர் தீனதயாளன் ராமநாதன் முத்துச்சாமி முனியப்பன் பள்ளி மேலாண்மை குழு தலைவர் ரிண்டு மோல். தினேஷ் பாபு. தினேஷ்குமார். குமாரசாமி. சிபிக்குமார். ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாணவ மாணவிகள் மாவட்ட அளவிலான விளையாட்டுப்போட்டி பேச்சுப்போட்டி இலக்கிய மன்றம் கலைத் திருவிழா போன்றவைகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன

அதனைத் தொடர்ந்து பள்ளி மாணவ மாணவிகள் பரதநாட்டியம் கிராமிய நடனம் பேச்சுப்போட்டிகள் விழிப்புணர்வு சம்பந்தமான கலை நிகழ்ச்சிகள் மற்றும் தமிழ் கல்வி பயிலும் மாணவ மாணவிகள் ஆங்கிலத்தில் சரளமாக பேசியது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினர்.

மற்றும் இந்நிகழ்வில் ஆசிரியர்கள் சமூக ஆர்வலர்கள் பெற்றோர்கள் முன்னாள் படித்த மாணவ மாணவிகள் பலர் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்..





செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் திமுக தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு க ஸ்டாலின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு காஞ்சி வடக்கு மாவட்ட கழக இளைஞர்கள் துணை அமைப்பாளர் கோ.ஜானகிராமன் அவர்களின் ஏற்பாட்டில் பழைய பல்லாவரம் பகுதியில் மண்டல தலைவர் ஜோசப் அண்ணாதுரை கலந்துகொண்டு கழக கொடி ஏற்றி ஏழை எளியவருக்கு புடவைகள், மரக்கன்றுகள் காலை சிற்றுண்டி பள்ளி குழந்தைகளுக்கு நோட்டுப் புத்தகம் ஆகியவற்றை வழங்கினார்கள் உடன் வட்ட கழகச் செயலாளர் பிரான்சிஸ் பால் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் இருவண்ண கொடியேற்றி 1000 நபர்களுக்கு அன்னதானம்

பம்மல் மார்ச்.4



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் பம்மல் இரட்டைப் பிள்ளையார் கோவில் அருகில் உறுதிமொழி ஏற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் தளபதி அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரம் மாநகராட்சி, 1வது மண்டலம் குழுத் தலைவர் பம்மல் தெற்கு பகுதி செயலாளர் வே.கருணாநிதி அவர்கள் ஏற்பாட்டில் பகுதி அவைத் தலைவர் ப.காளேஸ்வரன், பகுதி பொருளாளர்

ஆர்.உமாசங்கர், பகுதி துணை செயலாளர் என்.பன்னீர் செல்வம்,துரை இளங்கோவன், பா.கவிதா, மாவட்ட பிரதிநிதி பா.டில்லி, மாநகர பிரதிநிதி பி.ஜே.வேந்தன், என்.கே. ரவிச்சந்தின்,இரா.கந்தவேலு, ரா.கோகுல், சு.மனோகரன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு,மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் வி.ரவிச்சந்திரன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சத்தியபிரபு ஆகியோர் முன்னிலையில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் கழக இருவண்ண கொடியேற்றி 1000 நபர்களுக்கு அன்னதானம் வழங்கினார். இதனை தொடர்ந்து பம்மல் தெற்கு பகுதிக்கு உட்பட்ட 5,6,7,8,10,11,12 ஆகிய வார்டுகளில் வட்ட கழக செயலாளர்கள் ஏ.அனிஸ்டன், வி.எஸ்.ஜெகநாதன், மு.இன்பசேகர், என்.காந்தி, எச்.முகமது அப்பாஸ், எம்.சுகு மாரன், பி.ஸ்ரீதர் ஆகியோர் ஏற்பாட்டில் வட்டங்கள் தோறும் கழக இருவண்ண கொடியேற்றி இனிப்பு,நலதிட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இதில் மாமன்ற உறுப்பி னர்கள் கல்யாணி டில்லி, ரம்யா சத்தியபிரபு, ஆ.மதினா பேகம்,சத்யா மதியழகன், மாவட்ட மாநகர அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# குன்னூரில் காவல்துறையினர் மற்றும் தன்னார்வலர் அமைப்பு இணைந்து நகரப்பகுதி முழுவதும் தூய்மைப்படுத்தும் பணி

குன்னூர், மார்ச்.4



குன்னூரில் காவல்துறையினர் மற்றும் தன்னார்வலர் அமைப்பு இணைந்து நகரப்பகுதி முழுவதும் தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

நீலகிரி மாவட்டம் காவல் கண்காணிப்பாளர் நிஷா உத்தரவின் பேரில் குன்னூர் டிஎஸ்பி ரவி தலைமையில் குன்னூர் சுற்றுவட்டார பகுதியில் உள்ள ஐந்து காவல் நிலையத்தில் பணியாற்றும் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், காவலர்கள், போக்குவரத்து காவல்துறை, என 75 காவல்துறையினரும் தன்னார்வையில் அமைப்பைச் சேர்ந்த 25 தன்னார்வலர் அவர்களும் இணைந்து குன்னூர் நகரப்பகுதி முழுவதும் தூய்மை பணிமேற்கொண்டனர் பஸ் நிலையம், டிடிகே சாலை, மவுண்ட் ரோடு, மார்க்கெட், என பல்வேறு பகுதிகளில் ஆங்காங்கே கிடக்கும் பிளாஸ்டிக் குப்பைகளை எடுத்து பையில் சேகரித்து நகராட்சி வாகனத்தில் ஏற்றி அனுப்பினர். காவல்துறையின் தூய்மை பணிக்கு பொதுமக்கள் பாராட்டு தெரிவித்தனர்.

# கன்னியாகுமரி அஞ்சுகிராமம் எஸ்.ஐ முருகனுக்கு மத்திய அரசின் அதி உத்கிருஷ்ட் சேவா பதக்கம்

கன்னியாகுமரி மார்ச்.4



கன்னியாகுமரி மாவட்டத்தில் அகில இந்திய அளவில் அசாதாரண பணியாற்றும் நிரந்த காவல்துறை பணி யாளர்கள், துணை ஊழியர்கள், ஊர்க்காவல்படையி னருக்கு மத்திய அரசு அதி உத்கிருஷ்ட் சேவா பதக்கம் என்ற சாதனை யாளர் விருதும் வழங்கி. பதக்கமும் கொளரவித்து வருகிறது. இந்த வருடம். இந்த விருது கன்னியாகுமரியை அடுத்த ஏழசாற்று பத்து கிராமத்தை சார்ந்த உதவி ஆய்வாளர் முருகனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

காவல்துறையில் பணியில் சேர்ந்து பல வருடங்களாக மாவட்ட காவல் கண்காணிப் பாளர் கீழ் இயங்கும் சிறப்பு படையில் நேர்மையாகவும், சட்டம், ஒழுங்கு விஷயங்களில் முன்கூட்டியே தகவல் சேகரித்து, நேர்மையான காவல்துறை அதிகாரி என பல தண்ணார்வ தொண்டு நிறுவனங்கள், அமைப்புக ளிடமிருந்து பலவிருதுகள் பெற்றுள்ளார். பின்னர் போக்குவரத்து பிரிவில் பணிபுரிந்து, தற்போழுது அஞ்சுகிராமம் காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகி றார், நேர்மையான, கடுமையான போலீஸ் அதிகாரி என்று ஒகி புயல், சுனாமி, கடும் மழை போன்ற இயற்கை பேரிடர் காலங்களில் மனித நேயபணி அனைவராலும் பாராட்டபட்டது. சிறந்த சேவைக்கான அதி உத்தி ருஷிட் சேவா பதக் கத்தை உதவி ஆய்வாளர் முருகன் அவர்களுக்கு கன் னியாகுமரி மாவட்ட எஸ். பி.டாக்டர் ஆர். ஸ்டாலின் வழங்கினார்.



தேனி மாவட்டம், தேனி மேரிமாதா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில், மேல்நிலை இரண்டாமாண்டு (+2) அரசு பொதுத்தேர்வு நடைபெற்ற மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



மதுரை மாவட்ட ஆட்சியரின் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாளில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட உதவிகளை வழங்கினார்.



இராமநாதபுரம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பன்னிரெண்டாம் வகுப்புக்கான அரசு பொதுத்தேர்வு நடைபெற்றதை மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்ற மேல்நிலை இரண்டாம் ஆண்டு அரசு பொது தேர்வினை முன்னிட்டு, சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட சிவகங்கை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி தேர்வு மையத்தில், மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மதுரை மாவட்ட பள்ளி கல்வித்துறை கீழ்உள்ள அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் 6 முதல் 12 வகுப்பு வரை கல்வி பயிலக்கூடிய மாணவ, மாணவியர்கள் 68 வது (எஸ்.ஜி.எப்.ஐ) தேசியப் போட்டிகளில் 76 பேர் பங்கேற்று, முறையே 2 தங்கம், 3வெள்ளி, 4வெண்கலம் என 9பேர் தேசிய அளவிலான பதக்கங்களையும், மாநில அளவிலான போட்டிகளில் சுமார் 1450 பேர் கலந்து கொண்டதில் 99 தங்கம், 71வெள்ளி, 98 வெண்கலம் என மொத்தமாக 268 பேர் பதங்கங்களை பெற்ற மாணவ, மாணவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ. சங்கீதா, பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

# செய்தித்தாளில் வடை கொடுத்தால் ரூ.1,000 அபராதம்



சிவகங்கை மார்ச்.4

சிவகங்கையில் நியூஸ் பேப்பரில் வடை விற்பனை செய்த கடைகளுக்கு ரூ.1,000 அபராதம் விதித்த உணவு பாதுகாப்புத் துறையினர் அதிரடி நடவடிக்கை எடுத்தனர் நியூஸ் பேப்பர் அச்சு மையில் காரீயம் உள்ளது. இதனால், அதில் வடை, பஜ்ஜி போன்ற எண்ணெய் பலகாரங்கள் வைத்து சாப்பிட்டால், நமது உடலுக்குள் காரீயம் சென்று தீங்கு ஏற்படுத்தும். இந்நிலையில், மீண்டும் இதுபோன்று விற்பனை செய்தால் உரிமம் ரத்து செய்யப்படும் என்றும் கடை உரிமையாளர்களை எச்சரித்தனர். கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரும்பாலும் கடைகளில் பேப்பரில் மட்டுமே கொடுத்து வருகின்றனர். இதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

# கன்னியாகுமரியில் கடையில் திருடிய 3 பெண்கள் கைது



கன்னியாகுமரி, மார்ச்.4


கன்னியாகுமரி மாதவ புரத்தைச் சேர்ந்தவர் பீட்டர் (வயது 40). இவர் கன்னியாகுமரி கடற்கரை சாலையில் உள்ள காமராஜர் மணி மண்டபம் அருகில் கீச்செயின் கடை நடத்தி வருகிறார்.

இவரது கடைக்கு நேற்று முன்தினம் 3 பெண்கள் வந்து கீ செயின் பார்த்து விலையைக் கேட்டனர். இந்நிலையில் கடையில் கூட்டம் அதிகமாக இருந்ததை பயன்படுத்தி அவர்கள், கடையில் இருந்த பணப்பையை நைசாக திருடி சென்று விட்டனர். அதில் ரூ 2 ஆயிரம் பணம் இருந்ததாக கூறப்படு கிறது. இதனையடுத்து போலீசார் அந்த மூவரையும் கைது செய்தனர்.

# புதிய மருத்துவ முறையை பயன்படுத்தி இதயத்தை தற்காலிகமாக நிறுத்தி மூளையில் அரிய அறுவை சிகிச்சை செய்து நறுவி மருத்துவர்கள் சாதனை!!

## நிறுவி நிறுவனத் தலைவர் டாக்டர். ஜி.வி.சம்பத் பாராட்டு!!

வேலூர் மார்ச்.4



வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, தோட்டப்பாளையம், சர்வதேச அளவிலான ஹென்றி போர்ட் மருத்துவம் உலக அளவில் புகழ்பெற்ற மருத்துவமனை குழுமமாகும், இந்த மருத்துவமனையின் கிளையான உலக அளவில் புகழ்பெற்ற வேலூர் நறுவி மருத்துவமனையில், அதிக இரத்த அழுத்தத்தின் காரணமாக மூளையில் உள்ள இரத்த குழாயில் வெடிப்பு ஏற்பட்டு உயிருக்கு போராடிய ஆந்திர மாநிலம் குப்பத்தை சேர்ந்த 55 வயது நபரை நறுவீ மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட புதிய மருத்துவ முறையை பயன்படுத்தி அறுவை சிகிச்சை மருத்துவர்கள் 8 மணி நேரம் அறுவை சிகிச்சை செய்து வெற்றிகரமாக அவரை காப்பாற்றினர். இதுகுறித்து நறுவீ மருத்துவமனை நிறுவனத் தலைவர் முனைவர். ஜி.வி.சம்பத் மருத்துவமனையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

ஆந்திர மாநிலம் குப்பம் பகுதியை சார்ந்த முரளி என்ற 55 வயதுடைய நோயாளி ஒருவர் மூளையில் இரத்த குழாய் வெடித்து வீக்கத்துடன் சுய நினைவு இல்லாமல் உயிருக்கு போராடிய நிலையில் சிகிச்சைக்காக இங்கு அனுமதிக்கப்பட்டார். அவரை மருத்துவர்கள் பரிசோதனை செய்த போது அவரக்கு மூளையின் இடது புற இரத்த குழாயில் வெடிப்பு ஏற்பட்டு உள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து மூளையில் அறுவை சிகிச்சை செய்ய முடிவு செய்யப்பட்டது. மருத்துவமனை மூளை அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் பால் ஹென்றி தலைமையில் மருத்துவர்கள் டாக்டர். பூபேஷ் புகழேந்தி, டாக்டர். சிவகுமார், இதய அறுவை சிகிக்சை நிபுணர் டாக்டர். விநாயக் சுக்லா தலைமையில், டாக்டர். ரே.ஜார்ஜ், மயக்கவியல் நிபுணர்கள் டாக்டர். சரவணன், டாக்டர். ராஜசேகர் கொண்ட குழுவினர் இணைந்து அறுவை சிகிச்சை பணியை தொடங்கி, இந்த அறுவை சிகிச்சை செய்யும் போது மூளைக்கு இரத்தம் செல்லாமல் இருக்க இதய அறுவை சிகிச்சை மருத்துவர்கள் மூலம் இதயத்தை தற்காலிகமாக நிறுத்தி இயந்திரம் மூலம் செயல்பட வைத்து மூளைக்கு இரத்தம் செல்வது தடுக்கப்பட்டது. வழக்கமாக மனித இதயத்தின் வெப்ப நிலை 34 டிகிரி செல்சியஸ் கொண்டதாக இருக்கும். இதனை 18 டிகரி செல்சியசாக குறைத்து மூளையில் அறுவை சிகிச்சை செய்வதற்கு வசதியாக மூளைக்கு செல்லும் இரத்த ஓட்டம் 20 நிமிடம் நிறுத்தப்பட்டது. பின்பு மூளையில் அறுவை சிகிச்சை மூலம் இரத்த குழாயில் ஏற்பட்ட வெடிப்பை சரிசெய்தனர். பிறகு மீண்டும் இதயத்தை வழக்கமான வெப்ப நிலைக்கு கொண்டு வந்து அதனை மீண்டும் செயல்பட வைத்தனர்.

இந்த முறையான அறுவை சிகிச்சை மிகவும் கடினமானதும் மற்றும் அரியதுமான ஒன்று. நாட்டிலேயே முதன் முறையாக இப்படிப்பட்ட அறுவை சிகிச்சை நடந்துள்ளது. இதன் மூலம் இம்மருத்துவமனை சாதனை படைத்துள்ளது. இந்த அறுவை சிகிச்சை மூலம் குணமடைந்த நோயாளி முரளி கூறுகையில் எனக்கு தலையில் பாதிப்பு ஏற்பட்டவுடன் நான் சுய நினைவை இழந்தேன். எனது குடும்பத்தினர் என்னை குப்பம் பகுதியிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அந்த மருத்துவமனையில் என் நிலைமை மோசமாக உள்ளதாகவும் உடனே வேலூர் நறுவீ மருத்துவமனைக்கு செல்லும்படி கூறியதால் நான் இங்கு வந்து சிகிச்சைக்கு சேர்ந்தேன். அதை தொடர்ந்து இம்மருத்துவமனை மருத்துவர்கள் எனக்கு சிறப்பான முறையில் சிகிச்சை அளித்து என் உயிரை காப்பாற்றினர். இப்போது நான் முழு உடல் நலம் பெற்று எனது அலுவலகப் பணியை சிறப்பாக செய்து வருகிறேன் என்றார். இந்த அரிய வகை அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்து நோயாளியின் உயிரை காப்பாற்றிய மருத்துவ குழுவினரை மருத்துவமனை நிர்வாகத்தின் சார்பில் அதன் தலைவர் முனைவர் ஜி.வி. சம்பத் பாராட்டினார். இந்நிகழ்வில் நறுவீ மருத்துவமனை மருத்துவ சேவைகள் தலைவர் டாக்டர். அரவிந்தன் நாயர், மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர். ஜேக்கப் ஜோஸ் மற்றும் நோயாளியின் குடும்பத்தினர் என பலர் உடனிருந்தனர்.



கேரளாவில் உலக புகழ்பெற்ற ஆற்றுக்கால் பகவதி கோவிலில் இவ்வருட பொங்கல் திருவிழா 2025 மார்ச் மாதம் 5ம் தேதி புதன் கிழமை ஆரம்பமாகிறது. அன்று காலை 10.00 மணிக்கு அம்மனுக்கு காப்புகெட்டி, குடியிறுத்தி திருவிழா ஆரம்பமாகிறது. லட்சக்கணக்கான பெண்பக்தர்கள் பங்குபெறும் உலக பிரசித்தி பெற்ற ஆற்றுக்கால் பகவதி பொங்கல் விழா மார்ச் 13ம் தேதி வியாழக்கிழமை நடைபெறும் சுத்த புண்ணிய சடங்குகளுக்கு பின் காலை 10.15 மணிக்கு பண்டார அடுப்பில் தீ மூட்டப்படும். மதியம் 1.15 மணிக்கு பொங்கல் நைவேத்யம் நடைபெறும். அன்று இரவு அம்மன் நகர் ஊர்வலம் முடிந்த பின் மார்ச் 14ம் தேதி வெள்ளிக்கிழமை இரவு 1.00 மணிக்கு நடக்கும் குருதி தர்பணத்துடன் திருவிழா நிறைவு பெறும் என நாகர்கோவிலில் செய்தியாளர்களிடம் ஆலய நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# சிவகங்கை மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

சிவகங்கை மார்ச்.4

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தலைமையில் நடைபெற்றது.





மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், இலவச வீட்டு மனைப் பட்டா, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித் தொகை, மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித்தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொதுமக்களிடமிருந்து 286 மனுக்கள் பெறப்பட்டது. அம்மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், அறிவுறுத்தினார்.

மேலும், இக்கூட்டத்தில் தாட்கோ சார்பில் 05 பயனாளிகளுக்கு தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய அடையாள அட்டைகளை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் வழங்கினார்.இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள் உட்பட அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மதுரையில் சங்கமித்த பெண் காவலர்களின் "நாங்க அடங்க மாட்டோம் வாட்ஸ் அப் குழு" தோழிகளின் 21 ஆண்டுகால நட்பு!



மதுரை, மார்ச்.4

மதுரையில் சங்கமித்த பெண் காவலர்கள் ஆணுக்கு பெண் சளைத்தவள் இல்லை" என்ற சொலவடையை தினம்தினம் உண்மையாக்கும் துறைகளில் ஒன்று காவல்துறை. தமிழ்நாடு காவல்துறையில் 1973ம் ஆண்டு முதன்முதலாக மகளிர் காவலர்கள் சேர்க்கப்பட்டு தற்போது பொன்விழா ஆண்டை கடந்து தங்களது பணிகளில் முத்திரை பதித்து வருகின்றனர்.

சட்டம் ஒழுங்கு காவல் நிலையங்களில் உள்ள 1,356 ஆய்வாளர் பணியிடங்களில், 503 காவல் ஆய்வாளர்கள் பெண்கள். அதாவது, சட்டம் ஒழுங்கு பாதுகாப்பில் 37 சதவிகிதம் பெண் காவல் ஆய்வாளர்கள் பணிபுரிகிறார்கள்.

தங்களது துறை சார்ந்து பெண் சிங்கங்களாக திகழக்கூடிய பெண் காவலர்கள் தங்களது இடையறாத பணிகளுக்கு இடையேயும் 2005 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த பெண் காவலர்கள் 21 ஆண்டு கால நட்பை தொடர்ந்து தங்களது சந்திப்பால் சாத்தியமாக்கி வருகின்றனர். 2005 ஆம் ஆண்டு காவல்துறை பணியில் சேர்ந்த மதுரை, தேனி திண்டுக்கல், விருதுநகர் சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த பெண் காவலர்கள் சுமார் 200க்கும் மேற்பட்டோர் 21 ஆண்டுகளைக் கடந்தும் தொடர்ந்து நட்பு பாராட்டி வருகின்றனர். சமீபத்தில் இவர்களுடைய சங்கமம் அழகர் கோவில் அருகே நடைபெற்றது.

தங்களது பணிச்சுமை மன அழுத்தத்தை குறைக்கும் வகையில் ஆட்டம், பாட்டம், கொண்டாட்டத்துடன் மிகவும் கலகலப்பாக இந்த சந்திப்பை பகிர்ந்து கொண்ட பெண் காவலர்கள் நினைவு பரிசை பெற்றுக் கொண்டதோடு மட்டுமல்லாமல் தடபுடலான மதிய விருந்து அளித்தும் அசத்தி விட்டனர். ஏற்கனவே முதல் முறை பதவி உயர்வு பெற்ற போதும் இந்த சந்திப்பை மதுரையில் நடத்திய பெண் காவலர்கள் அதன் பிறகு சிறுமலையில் இது போன்ற சந்திப்பு நிகழ்ச்சியை நடத்தியுள்ளனர். தொடர்ந்து தற்போது மூன்றாவது முறையாக இந்த சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. பெண் காவலர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் மனம் விட்டு பேசிக்கொள்வதோடு மட்டுமல்லாமல் தங்கள் குடும்ப ரீதியாக மருத்துவ உதவிகள் உள்ளிட்ட பல்வேறு சேவை பணிகளையும் இதன் மூலம் நிறைவேற்றி வருவது உண்மையில் பாராட்டுக்குரியது.

அதிலும் குறிப்பாக நாங்க அடங்க மாட்டோம் வாட்ஸ் அப் குழு தோழிகள் என்ற பெயரில் 2018 ஆம் ஆண்டு தொடங்கி இது போன்ற சங்கமங்களை ஒருங்கிணைத்து வருவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரும் ஒரே மாதிரியான சீருடை போன்ற புடவை அணிந்து ஒருவருக்கொருவர் புன்னகையோடு வரவேற்று உபசரித்த விதம் 21 ஆண்டுகால நட்பின் உன்னதத்தை உணர்த்துவதாகவே அமைந்தது.

# மதுரையில் தமிழ்ப்பேராயம் ஒருங்கிணைக்கும் சொல் தமிழா சொல் 2025 போட்டி

மதுரை, மார்ச்.4




எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத் தமிழ்ப்பேராயம் சார்பில் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சாற்றலை அங்கீகரிக்கும் நோக்கத்தில் சொல் தமிழா சொல் 2025 என்னும் தலைப்பில் மிகப்பிரம்மாண்டமான பேச்சுப் போட்டியைத் தற்போது ஏற்பாடு செய்துள்ளது. தமிழகம் மற்றும் புதுச்சேரியை உள்ளடக்கி 9 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு இப் பேச்சுப்போட்டி பல்வேறு கல்லூரிகளில் நடத்தத் திட்டமிடப்பட்டது. 6வது மண்டலத்திற்கான பேச்சுப் போட்டி மதுரை தியாகராஜர் கல்லூரியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

350க்கும் மேற்பட்ட மாணவர்கள், 6 நடுவர்கள் என மிகப்பிரம்மாண்டமாக மதுரை மண்டலப் போட்டி நடைபெற்றது. பல சுற்றுகளாக நடைபெற்ற இப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் விவரம் பின்வருமாறு

1.முதல் பரிசு சி. டிக்ஸன், காந்திகிராமிய பல்கலைக் கழகம், 1,00,000 ரூபாய், 2. இரண்டாம் பரிசு எம். ஹெப்சிபா, அமெரிக்கன் கல்லூரி, மதுரை, 75,000 ரூபாய்

3. மூன்றாம் பரிசு வி. பவித்ரா, எம்.வி.முத்தையா அரசு கலைக் கல்லூரி, திண்டுக்கல், 50,000 ரூபாய் இப்போட்டியில் வெற்றிபெற்றோருக்குச் சான்றிதழ்களை கரு. நாகராசன், தலைவர், தமிழ்ப் பேராயம் வழங்கிச் சிறப்பித்தார். வெற்றியாளர்களில் முதல் நால்வர் மாநில அளவிலான இறுதிப்போட்டியில் பங்கேற்கத் தகுதிபெறுவர். போட்டிகளில் வென்றோருக்கான பரிசுத்தொகை மாநில அளவிலான இறுதிப்போட்டி அன்று வழங்கப்படும்.

# மதுரை மாவட்ட வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் பயனடைந்த பயனாளி முதல்வருக்கு நன்றி

மதுரை மாவட்டத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை சார்பாக சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 1,18,853 அமைப்பு சாரா தொழிலாளர் பயனாளிகள் ரூ.100.33 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நடத்திட்ட உதவிகள் பெற்று பயனடைந்துள்ளனர்.



தமிழ்நாட்டிலுள்ள அமைப்புசாரா தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் பணி நிலைமைகளை ஒழுங்குபடுத்தவும், அவர்களுக்கு சமூக பாதுகாப்பு அளிக்கவும், தமிழ்நாடு அரசு 1982 ஆம் ஆண்டில் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தினை இயற்றியது. அதனையடுத்து கட்டுமான தொழிலாளர்கள் அமைப்பு சாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள், சமையல் தொழிலாளர்கள், ஓவியர்கள், வீட்டுப் பணியாளர்கள், தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிலாளர்கள், பொற்கொல்லர், முடித்திருத்துவோர், கைவினைத் தொழிலாளர்கள், கைத்தறி மற்றும் பட்டு நெய்யும் தொழிலாளர்கள், உடலுழைப்பு தொழிலாளர்கள், பனைமரத் தொழிலாளர்கள், மண்பாண்ட தொழிலாளர்கள், விசைத்தறி நெசவாளர்கள், தையல் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், பாதையோர வணிகர்கள், கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் என தமிழ்நாடு அரசின் மூலம் 18 நலவாரியங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

அமைப்பு சாரா தொழிலாளர்கள் அனைவரும் நலவாரியங்களில் உறுப்பினர்களாக பதிவு செய்வதன் மூலம் அரசின் நலத்திட்ட உதவிகளை பெற்று பயனடைய முடியும். பதிவு செய்வதற்கு www.tnuwwb.tn.gov.in என்ற இணைய வழியில் விண்ணப்பிக்கலாம். இதுதொடர்பான கூடுதல் விவரங்களுக்கு மதுரை எல்லீஸ் நகர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய அலுவலக முதல் தளத்தில் செயல்பட்டு வரும் தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகத்தை நேரில் தொடர்பு கொள்ளலாம்.

ஆத்திக்குளம் திட்டப் பகுதியில் உள்ள குடியிருப்பில் வசிக்கும் திரு.சரவணன் ஜெயபாரதி தம்பதியினர் தெரிவித்ததாவது:

என் பெயர் சரவணன். எனது கணவர் பெயர் ஜெயபாரதி. எங்களுக்கு 3 குழந்தைகள் உள்ளனர். நான் சலவை தொழில் செய்து வருகிறேன். தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் உறுப்பினராக உள்ளேன். தமிழ்நாடு அரசு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு செயல்படுத்தி வரும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் விண்ணப்பித்தேன். அதன் மூலம் எனக்கு ஆத்திக்குளத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கீழ் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் எனக்கு புதிய வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டது. புதிதாக வழங்கப்பட்டு இந்த வீட்டில் போதிய இடவசதியோடு விசாலமாக உள்ளது. நமக்கென்று ஒரு புதிய வீடு என்று நினைக்கும்போது உள்ளூர மிக மகிழ்ச்சியாக உள்ளது. தமிழ்நாடு அரசு என்னைப் போன்ற அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட அரசாக உள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தொகுப்பு

இ.சாலி தளபதி எம்.ஏ.,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.

ம.கயிலைச் செல்வம், பி.இ,

உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி), மதுரை.




தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே வடபுதுப்பட்டியில் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் ,அஇஅதிமுக பொதுச்செயலாளருமான எடப்பாடி பழனிச்சாமி பெரியகுளம் ஒன்றிய கழக செயலாளர் அன்னபிரகாஷ் இல்ல திருமண வரவேற்பு விழாவில் கலந்துகொண்டு மணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

# பம்மல் தெற்கு பகுதி தமிழக வெற்றி கழக நிர்வாகிக்கு சிறந்த சமூக சேவை அறம் விருது வழங்கி பாராட்டு

செங்கல்பட்டு, மார்ச்.4

செங்கல்பட்டு மாவட்டம் தமிழக வெற்றி கழகம் பம்மல் தெற்கு பகுதி தலைவர் ஏ.கண்ணன் தமிழகத்தின்

மக்கள் நலப் பணியில் சிறந்த சமூக சேவை விருதினை இயக்குனர் பாக்கியராஜ், நிறுவனர் நீதியின் குரல் சி.ஆர். பாஸ்கரன் மற்றும் நகைசுவை நடிகர் மதுரை முத்து ஆகியோர் வழங்கி பாராட்டினர்.



அகில இந்திய தலைமை விஜய் ரசிகர்கள், விஜய் நற்பணி இயக்கம் 2001 அன்று முதல் இன்று கட்சியாக தமிழகம் வெற்றி கழகத்தில் உருவாக்கப்பட்ட நிலையில் தற்போது வரை இதில் பொதுமக்களுக்கு அன்னதானம், பண்டிகை காலங்களில் தாய்மார்களுக்கு புடவைகள், பள்ளி மாணவ மாணவிகளுக்கு இலவச நோட்டு புத்தகம், பென்சில், பேனா, ஸ்கூல் பேக், உள்ளிட்ட பொருட்கள், மற்றும் இலவச ரத்ததான முகாம்களை நடத்தி வருகின்றனர் இதில் சுமார் 5000 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் பயனடைந்துள்ளனர்

இத்தனை சாதனை படைத்த தவெக வின் பம்மல் தெற்கு பகுதி தலைவர் பம்மல் ஏ.கண்ணன் சிறந்த சமூக சேவை அறம் விருதுக்கு தேர்வானது. அதன்படி சென்னை தேனாம்பேட்டையில் உள்ள நாரத கானா சபாவில் நடந்த அறம் விருதுகள் 2025 விருது வழங்கும் விழாவில் பம்மல் தெற்கு பகுதி தலைவர் பம்மல் ஏ.கண்ணன் சிறந்த சமூக சேவை விருது வழங்கி கவுரவிக்கப்பட்டனர்.

விருதினை நடிகரும், இயக்குனருமான பாக்கியராஜ் மற்றும் நிறுவனர் நீதியின் குரல் சி.ஆர்.பாஸ்கரன் ஆகியோர் தமிழக வெற்றி கழகம் பம்மல் தெற்கு பகுதி தலைவர் பம்மல் ஏ.கண்ணனுக்கு வழங்கி கவுரவித்தனர்.

இது குறித்து பம்மல் தெற்கு பகுதி தலைவர் பம்மல் ஏ.கண்ணன் கூறும்போது, தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் மற்றும் பொதுச் செயலாளர் என்.ஆனந்த் அறிவுத்தலின்படி மக்களுக்காக பணியாற்றிய வேண்டுமென்று அதன் அடிப்படையில் மக்கள் பணியில் ஈடுபட்டதற்கு அங்கீகாரமாக இந்த விருதினை பெற்றுள்ளோம் என்றார்.

# கோவிலம்பாக்கம் திமுக சார்பில் முதலமைச்சர் பிறந்தநாளை முன்னிட்டு உதவிகள், அன்னதானம்



சோழிங்கநல்லூர் மார்ச்.4

சென்னை புறநகர் மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கோவிலம்பாக்கம் ஊராட்சியில் திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் 72வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பொதுமக்களுக்கு 1000ற்கும் மேற்பட்டோருக்கு நலத்திட்ட உதவிகள், அருஞ்சுவை உணவு அன்னதானம் வழங்கி சிறப்பாக நடைபெற்றது. மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்த்து துறை அமைச்சருமான மா.சுபிரமணியன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் வாழ்த்துக்களுடன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச. அரவிந்த் ரமேஷ் முன்னிலையில் கோவிலம்பாக்கம் மெயின் ரோட்டில் அருகில் காலை 11 மணிக்கு புனித தோமையார் மலை தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் கோவிலம்பாக்கம், ஜி. வெங்கடேசன் தலைமையில் நடைபெற்ற விழாவில் திராவிட முன்னேற்ற கழகக் கொடியை ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி, 1000ற்கும் மேற்பட்டோருக்கு நலத்திட்ட உதவிகள், அருஞ்சுவை உணவு சிக்கன் பிரியாணி பரிமாறி பிறந்த நாளை விழாவை கொண்டாடினர். மேலும் தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம் என்று பிறந்தநாள் விழாவில் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேர்வு நடைபெறும் மையத்தினை திருப்பூர் மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு



திருப்பூர் மார்ச் 04

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் 20242025 நடப்புக் கல்வி ஆண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு தொடங்கி உள்ளதையொட்டி, நேற்று (03.03.2025) திருப்பூர் ஜெய்வாபாய் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு அரசுத் தேர்வுத் துறையால் நடத்தப்படும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு 03.03.2025 முதல் 25.03.2025 வரையிலும், மேல்நிலை முதலாமாண்டு தேர்வு 05.03.2025 முதல் 27.03.2025 வரையிலும் நடைபெறவுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வினை 92 தேர்வு மையங்களில் 217 மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 25,863 மாணவ / மாணவியர்களும், தனித்தேர்வர்களாக 379 மாணவ, மாணவிகளும் மொத்தம் 26,242 மாணவ, மாணவியர்கள் தேர்வெழுத உள்ளனர். மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வினை திருப்பூர் வருவாய் மாவட்டத்தில் 92 தேர்வு மையங்களில் 221 மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 27,237 மாணவ மாணவியர்களும், தனித்தேர்வர்களாக 328 மாணவ, மாணவிகளும் என மொத்தம் 27,565 மாணவ, மாணவியர்கள் தேர்வெழுதி வருகின்றனர்.

அந்த வகையில், இன்றைய தினம் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு நடைபெறும் பள்ளிகளில் ஒன்றான திருப்பூர் ஜெய்வாபாய் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்தார்..

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161